**சம்பா பருவத்துக்கு உகந்த நெல் ரகம் கோ ஆர் 49**

First Published : 14 Oct 2010 02:55:13 PM IST

திருவள்ளூர், அக். 13: திருவள்ளூர் மாவட்டத்தில் பிபிடி 5204 ரகம் பயிரிடும் போது ஏற்படும் பூச்சித் தாக்குதல் மற்றும் பொருளாதார இழப்பை தடுக்க விவசாயிகள் இந்த சம்பா பருவத்துக்கேற்ற கோ ஆர் 49 ரக நெல்லை பயிர் செய்யலாம் என திரூர் வேளாண் நெல் ஆராய்ச்சி மைய உதவி பேராசிரியர் மணிமேகலை தெரிவித்தார்.

÷கோஆர் 49 ரக நெல்லின் பயன்கள் குறித்து மணிமேகலை கூறியது:

÷திருவள்ளூர் மாவட்டத்தில் பிந்திய சம்பா பருவத்தில் பெரும்பாலும் பிபிடி 5204 ரக நெல்லையே விவசாயிகள் பயிரிடுகின்றனர். இப்பருவ காலத்தில் பிபிடி 5204 ரக பயிர்களில் அதிகளவில் பூச்சித் தாக்குதல், நோய்த் தாக்குதல் போன்றவற்றால் விவசாயிகளுக்கு பெருமளவில் பொருளாதார இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது.

÷மேலும் பிபிடி 5204 ரக நெல்லை பயிரிடும்போது ஒரு ஹெக்டேருக்கு 4.5 டன் வரை மட்டுமே மகசூல் கிடைக்கும். ஆனால் நெல் ஆராய்ச்சி மையத்தின் கண்டுபிடிப்பான கோஆர் 49 ரக நெல்லை பயிரிடும்போது ஒரு ஹெக்டேருக்கு 6.2 டன் மகசூல் பெற வாய்ப்புள்ளது.

÷மேலும் கோ ஆர் 49 ரக நெல் பயிரிடுவதால், குருத்துப் பூச்சி, பச்சை தத்துப்பூசி ஆகியவற்றை சமாளிக்கும் எதிர்ப்புத் திறன், குலை நோய், துங்ரோ நோய் எதிர்ப்பு திறன்களுடன் சிறந்த சமையல் பண்பையும் கொண்டதாகும்.

÷இவை அல்லாமல் ஏற்கெனவே பிபிடி 5204 ரக நெல்லை பயிரிட்டுள்ள விவசாயிகள், ஒரு கிலோ விதைக்கு 10 கிராம் அளவில் சூடோமோனஸ் கொண்டு விதை நேர்த்தி செய்ய வேண்டும். 8 சென்ட் நாற்றங்காலுக்கு 5 கிலோ என வேப்பம் பிண்ணாக்கு அடி உரமாக பயன்படுத்த வேண்டும்.

÷கார்போபியூரான் குறுணை ஒரு சென்ட்டுக்கு 170 கிராம் சம அளவு மணலுடன் கலந்து 10-வது நாளில் இட வேண்டும். நாற்றுக்களை 25-ல் இருந்து 30 நாள்களுக்குள் இட வேண்டும். நடவு செய்வதற்கு தாமதம் ஏற்பட்டால் ஒரு டேங்குக்கு எண்டோசல்பான் 40 மில்லி அல்லது புரோபினோபாஸ் 40 மில்லி என்ற அளவில் கலந்து நாற்றங்காலில் நடவும்.

÷நடும்போது ஒரு குத்துக்கு 2 நாற்றுக்கள் வீதம் நட வேண்டும். 8 அடிக்கு ஒரு அடி அளவில் பட்டம் விட்டு நடவும்.

÷பூச்சி மற்றும் நோய் தாக்குதல் பொருளாதார சேத நிலையைத் தாண்டும்போது அங்கீகரிக்கப்பட்ட பூச்சி மருந்து மற்றும் பூச்சித் தெளிப்பான்களை தெளிக்க வேண்டும்.

÷இந்த முறைகளை விவசாயிகள் கடைபிடித்தால் பெரும் பொருளாதார இழப்பில் இருந்து தங்களை பாதுகாத்துக் கொள்ளலாம் என்றார் மணிமேகலை.

**விவசாயம் செய்யக் கூடாது என மிரட்டல் உச்சவரம்புச் சட்டத்தில் வழங்கிய நிலத்தில்**

First Published : 14 Oct 2010 10:51:30 AM IST

திருப்பூர், அக்.13: நில உச்சவரம்புச் சட்டத்தில் வழங்கப்பட்ட நிலங்களில் விவசாயம் செய்யக் கூடாது என தொடர்ந்து மிரட்டல் விடுத்து வரும் நபர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவிநாசியைச் சேர்ந்த விவசாயிகள் மாவட்ட எஸ்பி அருணிடம் புகார் அளித்துள்ளனர்.

÷திருப்பூர் மாவட்டம் அவிநாசி தாலுகா கானாங்குளம்புதூரைச் சேர்ந்த ராமண கவுண்டர் மகன் ஆர்.சுப்பிரமணியம். இவரது தந்தைக்கு அப்பகுதியிலுள்ள பழனித்தோட்டம் என்ற இடத்தில் நில உச்சவரம்புச் சட்டத்தின் கீழ் 50 சென்ட் நிலத்தை அரசு வழங்கியுள்ளது. அந்த நிலத்தில் சுப்பிரமணியம் விவசாயம் செய்து வருகிறார். இதேபோல், அதே ஊரைச் சேர்ந்த வேலப்பகவுண்டர் மகன் கருப்பணகவுண்டருக்கும் நில உச்சரம்பு சட்டத்தில் அரசு வழங்கிய 4 ஏக்கர் நிலத்திலும் விவசாயம் செய்யப்படுகிறது.

÷இந்நிலையில், கடந்த செப்.20ம் தேதி அந்நிலத்தில் புகுந்த சில நபர்கள் நிலத்தில் இருந்த பயிர்களை அழித்து நாசம் செய்ததுடன், அந்நிலத்தில் இருந்து வெளியேறும்படி மிரட்டல் விடுத்ததாகவும் தெரிகிறது. தவிர, கருப்பணகவுண்டர் நிலத்திலும் புகுந்து அங்கிருந்த பயிர்களையும் அழித்து நாசம் செய்ததாகவும் கூறப்படுகிறது.

÷இது குறித்து சுப்பிரமணியம், கருப்பணகவுண்டர் ஆகியோர் கடந்த செப்.21ம் தேதி அவிநாசி காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளனர். ஆனால், அப்புகாரின் மீது இது வரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை எனக் கூறப்படுகிறது. இதனால், ஆவேசமடைந்த விவசாயிகள் தங்கள் குடும்பத்துடன் மாவட்ட எஸ்பி ஏ.அருணிடம் புகார் மனு அளித்தனர்.

அதில், நில உச்சவரம்புச் சட்டத்தில் கையகப்படுத்தி அரசு அளித்த நிலத்தில் விவசாயம் செய்ய முடியாமல் தடுக்கும் நபர்கள் மீது காவல்துறை உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும், தொடர்ந்து அந்நிலத்தில் விவசாயம் செய்ய உரிய பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

÷கோரிக்கையை ஏற்ற எஸ்பி அருண், விசாரணை அடிப்படையில் இப்பிரச்னைக்கு உரிய தீர்வு கிடைக்க வழிவகை செய்யப்படும் என்றார்.

**கூடுதல் விலைக்கு உரம் விற்பனை**

First Published : 14 Oct 2010 02:21:59 PM IST

காரியாபட்டி,அக். 13: விருதுநகர் மாவட்டம் காரியாபட்டி, திருச்சுழி பகுதி கடைகளில் கூடுதல் விலைக்கு உரம் விற்கப்படுவதாக விவசாயிகள் புகார் தெரிவிக்கின்றனர்.

கடந்த மார்ச் மாதத்திற்கு பின்னர், யூரியா தவிர அனைத்து உரங்களுக்கும் அந்தந்த கம்பெனிகளே விலை நிர்ணயம் செய்துகொள்ள அனுமதிக்கப்பட்டது.

ஒவ்வொரு கம்பெனியின் விலையிலும் ஏற்ற இறக்கங்கள் உள்ளன. இதைச் சாதகமாகப் பயன்படுத்தி உரக்கடைகள் கூடுதல் விலைக்கு உரம் விற்பதாகப் புகார் எழுந்துள்ளது.

இதுகுறித்து விவசாயி சுந்தரவடிவேலு என்பவர் கூறியதாவது:

பல கடைகளில் உரம் வாங்கும்போது பில் தருவதில்லை. உரக்கடைகளில் அனைத்து உரங்களும் மூட்டைக்கு |20 முதல் |30 வரை கூடுதல் விலையில் விற்கப்படுகிறது என்றார்.

வேளாண் அதிகாரிகள் கூறும்போது ஏப்ரல் மாதம் முதல் யூரியா தவிர மற்ற உரங்களுக்கு கம்பெனிகளே விலை நிர்ணயம் செய்து கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது. மார்ச் வரை அரசு விலை நிர்ணயம் செய்து வந்தது. ஆனால், ஏப்ரல் முதல் உரங்களில் உள்ள தழைச்சத்து, மணிச்சத்து, சாம்பல் சத்துகளின் அடிப்படையில் டன்னுக்கு |14 ஆயிரம் முதல் |16 ஆயிரம் வரை அரசு மானியம் அளித்து வருகிறது. செலவீனத்தின் அடிப்படையில் உரங்களின் விலையினை நிர்ணயம் செய்து விற்றுக் கொள்ள கம்பெனிகளுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

மேலும் கடந்த மார்ச் மாத விலையில் |30-ஐ விட கூடுதலாகாமல் இருக்க வேண்டும் என அரசு உத்தரவிடப்பட்டுள்ளது.

தற்போது யூரியா (50கிலோ) |276.12, டிஏபி (50கிலோ) | 517.86, பொட்டாஷ் | 262.46, சூப்பர் பாஸ்பேட் |166, கம்ப்ளக்ஸ் உரங்கள் (20:20) |368. (16:20): |336 என்ற விலையில் விற்க வேண்டும்.

கம்பெனி நிர்ணயம் செய்துள்ள விலையை விட கூடுதல் விலைக்கு விற்க அனுமதியில்லை என்றார்.

## மர்ம நோயால் 500 ஏக்கர் நெற்பயிர் பாதிக்கும் அபாயம்

First Published : 14 Oct 2010 10:51:52 AM IST

உடுமலை, அக்.13: உடுமலை அருகே அறுவடைக்குக் காத்திருக்கும் நெற்பயிரில் மர்ம நோய் தாக்குதல் ஏற்பட்டுள்ளது. இதனால் சுமார் 500 ஏக்கர் நெல் முற்றிலும் பாதிக்கும் அபாயம் எழுந்துள்ளதால் விவசாயிகள் விரக்தி அடைந்துள்ளனர்.

÷உடுமலையை அடுத்துள்ள அமராவதி அணையின் மூலம் திருப்பூர், ஈரோடு, கரூர் வரையில் மூன்று மாவட்டங்களில் சுமார் 55 ஆயிரம் ஏக்கர் பழைய மற்றும் புதிய ஆயக்கட்டு நிலங்கள் பாசன வசதி பெற்று வருகின்றன. இதில் அணையை ஒட்டி அ மைந்துள்ள கல்லாபுரம், பூச்சிமேடு, பூளவாடி, வேல் நகர் பகுதிகளில் 1360 ஏக்கர் பழைய ஆயக்கட்டு நிலங்கள் ராஜவாய்க்கால்

பாசனத்தின் கீழ் உள்ளன. இந்தப் பகுதிக ளில் ஆண்டு தோறும் நெல் மட்டுமே பயிரிடப்பட்டு வருகிறது.

இந்நிலையில் கடந்த ஜூன் மாத இறுதியில் விவசாயிகள் ஏஎஸ்டி 16, ஏ எஸ்டி 43, ஆர்45 (எ) ஏஎஸ்டி 45, ஏடிடி 43 ஆகிய நெல் ரகங்களை நடவு செய்தனர். இதற்காக தாராபுரம், மடத்துக்குளம், உடுமலையில் தனியாரிடம் விதை நெல்லை கொள்முதல் செய்திருந்தனர். ஏடிடி 43 ரகத்துக்கு மட்டும் வேளாண்துறையின் மூலம் பெறப்பட்ட விதை நெல்லைப் பயிரிட்டனர்.

இதன் பின்னர் செம்மை நெல் சாகுபடி மூலம் விவசாயிகள் நெல் வயலை பராமரித்து வந்தனர். அறுவடைக்கு இன்னும் 20 நாட்களே உள்ள நிலையில் திடீரென ஒருவித மர்ம நோய் தாக்குதல் நெல் வயல்களில் ஏற்பட்டுள்ளது. இதனால் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

÷இது குறித்து விவசாயிகள் செவ்வாய்க்கிழமை கூறியது: 120 நாட்களில் அறுவடை செய்ய ஏதுவாக 4 ரகங்களில் நெல்லை பயிரிட்டிருந்தோம். தற்போது 100 நாள் ஆகிறது. இன்னும் 20 நாட்களில் அறுவடை செய்ய தயாராக இருந்தோம். இந்நிலையில் கடந்த சில நாட்களாக திடீரென மர்ம நோய் ஒன்று நெற் கதிர்களை தாக்கி வருகிறது. இதனால் நெல் மணிகள் அறுவடைக்குத் தகுதி இல்லாமல் மாறி வருகின்றன. த ண்டுகளில் ஊட்டச் சத்தே இல்லாத நிலையில் தண்டுகள் காய்ந்துவிட்டன. இந்தப் பகுதியில் மொத்தம் 1360 ஏக்கரில் நெற் பயிர்கள் பயிரிட்டுள்ளோம். இதில் சுமார் 500 ஏக்கர்கள் மர்ம நோய் தாக்குதலுக்கு உள்ளாகிவிட்டன. அரசு உடனடியாக இதில் தலையிட்டு வயல்களை பார்வையிட்டு தகுந்த நஷ்ட ஈடு கொடுக்க வேண்டும் என்றனர்.

÷இது குறித்து வேளாண்துறை அதிகாரிகள் கூறியது: இந்த மர்ம நோயினால் நெற் கதிர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டிருப்பது உண்மைதான். இது குறித்து கோவை வேளாண் பல்கலைக் கழகத்திற்கு தகவல்கள் அனுப்பி வைக்கப்படும். விஞ்ஞானிகள் கருத்திற்குப் பிறகு தமிழக அரசிற்கு இந்த நோய் குறித்து அதிகாரப்பூர்வ தகவல்கள் தெரிவிக்கப்படும். அறுவடை நிலையில் இருப்பதால் உடனடியாக இந்த நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றனர்.

**மரக்கன்று நடும் விழா**

First Published : 14 Oct 2010 10:51:41 AM IST

உடுமலை,அக்.13: உடுமலை ஆர்கேஆர் ஆசிரியர் பயிற்சி பள்ளியில் மரக் கன்றுகள் நடும் விழா செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

÷தமிழ்நாடு ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்குநர் ஆணைப்படி கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற இந்த விழாவிற்கு தாளாளர் ஆர்.கே.ராமசாமி தலைமை வகித்தார்.

இதையொட்டி 75 மரக்கன்றுகள் நடப்பட்டன. மேலும் மரக்கன்றுகளை ஆண்டு முழுவதும் பராமரிக்கவும் மாணவ, மாணவிகள், ஆசிரிய பயிற்றுனர்கள் உறுதி எடுத்துக் கொண்டனர்.

குடிமங்கலம் உதவித் தொடக்க கல்வி அலுவலர் சோ.தமிழ்செல்வி சிறப்புரையாற்றினார். ஆர்.கே.ஆர்.கார்த்திக்குமார் வாழ்த்துரை வழங்கினார். துணை முதல்வர் பி.மயில்வாகன் நன்றி கூறினார்.

**சிவகங்கையில் நாளை விவசாயிகள் குறைதீர்க் கூட்டம்**

First Published : 14 Oct 2010 02:29:49 PM IST

சிவகங்கை, அக். 13:

சிவகங்கை மாவட்ட விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் வெள்ளிக்கிழமை (அக். 15) நடைபெறுகிறது என மாவட்ட ஆட்சியர் சம்பத் தெரிவித்துள்ளார்.

ஆட்சியர் மேலும் தெரிவித்திருப்பதாவது: அக்டோபர்-2010-க்கான மாவட்ட விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் வெள்ளிக்கிழமை காலை ஆட்சியர் அலுவலக வளாகத்தில் ஆட்சியர் தலைமையில் நடைபெறுகிறது.

இக் கூட்டத்தில் மாவட்டத்தில் உள்ள அனைத்துத் துறை உயர் அலுவலர்களும் பங்கேற்கின்றனர்.

ஆகையால், கூட்டத்தில் விவசாஹயிகள் கலந்து கொண்டு விவசாயம் சார்ந்த குறைகளைத் தெரிவித்து நிவர்த்தி செய்து கொள்ளலாம் எனத் தெரிவித்துள்ளார்.

**புவி வெப்பமயமாதல் விழிப்புணர்வுப் பேரணி**

First Published : 14 Oct 2010 01:18:26 PM IST

ஜயங்கொண்டம், அக். 13: ஆண்டிமடம் ஒன்றியம், குவாகம் மேற்கு ஊராட்சி ஒன்றியத் துவக்கப் பள்ளியில் புவி வெப்பமயமாதல் விழிப்புணர்வு பேரணி அண்மையில் நடைபெற்றது. (படம்).

கூடுதல் உதவித் தொடக்கக் கல்வி அலுவலர் நிறைமதி தலைமை வகித்தார். ஊராட்சி மன்றத் தலைவர் இராமானுஜம், ஊராட்சிக் குழு உறுப்பினர் பானுமதி தர்மராஜ், பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் சண்முகசுந்தரம், கிராமக் கல்விக் குழுத் தலைவர் ஜெயந்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

ஆசிரியர் பயிற்றுநர் வெங்கடேசன் பேரணியை தொடக்கி வைத்தார். பேரணியில், மாணவ, மானவிகள் கோஷங்களை எழுப்பினர். பள்ளித் தலைமை ஆசிரியர் சாமிகண்ணு வரவேற்றார்.உதவி ஆசிரியர் சந்திரசேகர் நன்றி கூறினார்.

ஏற்பாடுகளை ஆசிரியர்கள் சந்திரசேகர், சரவணன், அன்புச்செல்வன், கருணாநிதி, ஆகியோர் செய்திருந்தனர்.

**மாவட்டத்தில் 6000 ஹெக்டேரில் ராஜராஜன் 1000 நெல் ரகம் பயிரிடப்படும்: இணை இயக்குநர்**

First Published : 14 Oct 2010 02:31:13 PM IST

ராமநாதபுரம், நவ. 13: ராமாநாதபுரம் மாவட்டத்தில் 6000 ஹெக்டேர் பரப்பளவில் ராஜராஜன் 1000 நெல் சாகுபடி தொழில்நுட்பத்தின் மூலம் பயிரிடப்பட உள்ளதாக வேளாண்மை இணை இயக்குநர் ந.சத்தியமூர்த்தி தெரிவித்தார். இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது:

உணவு உற்பத்தியைப் பெருக்க பல்வேறு சாகுபடி தொழில்நுட்பங்களை கண்டு பிடித்து விவசாயிகளுக்கு வேளாண்மைத் துறை மூலம் அறிமுகப்படுத்தப்பட்டு வருகிறது. குறைந்த நெல் விதை அளவினைப் பயன்படுத்தி அதிக மகசூல் கிடைக்கும் செம்மை நெல்சாகுபடி தொழில்நுட்பத்திற்கு ராஜராஜன் 1000 என்று கடந்த 26.9.10-ல் தஞ்சையில் நடைபெற்ற மாமன்னர் ராஜராஜ சோழன் வரலாற்று சிறப்பு மிக்க தஞ்சைக் கோயிலைக் கட்டி முடித்து ஆயிரம் ஆண்டுகள் நிறைவு விழாவில் முதல்வரால் பெயர் சூட்டப்பட்டது.

நெல் சாகுபடிக்குத் தேவையான இடுபொருள்களான நெல்விதை, நீர் மற்றும் உரங்களை குறைந்த அளவே பயன்படுத்துதல், இளவயது நாற்றுகளை நடுதல், அதிக இடைவெளி விட்டு நடுதல், கோனாவீடர் எனப்படும் களைக்கருவியினை பயன்படுத்தி களை எடுத்தல் போன்ற முறைகளைப் பின்பற்றி அதிக மகசூல் பெறுவதே செம்மை நெல் சாகுபடி திட்ட முறையாகும். இந்த தொழில்நுட்பமான ராஜராஜன் 1000 எனப்பெயரிடப்பட்டுள்ளது.

ராமநாதபுரம் மாவட்டத்தில் 6000 ஹெக்டேர் பரப்பளவில் ராஜராஜன் 1000 நெல்சாகுபடி தொழில்நுட்பத்தின் மூலம் பயிரிடப்படவுள்ளது. தேசிய உணவுப் பாதுகாப்புத் திட்டம், தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம், ஆத்மா திட்டம் மற்றும் நீர்வள, நிலவளத் திட்டம் போன்ற திட்டங்களின் மூலமாகவும் ராஜராஜன் 1000 தொழில்நுட்பத்தின் மூலமாக நெல்சாகுபடி செயல்விளக்கத் திடல்கள் ராமநாதபுரம் மாவட்டம் முழுவதும் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கான பயனாளிகள் பட்டியலும் களப்பணியாளர்கள் மூலம் தேர்வு செய்யப்பட்டு வருவதாகவும் இணை இயக்குநர் ந.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

**துல்லிய பண்ணைத் திட்ட பணிகளை அதிகாரி ஆய்வு**

First Published : 14 Oct 2010 12:46:24 PM IST

தூத்துக்குடி, அக். 13: தூத்துக்குடி மாவட்டம், புதூர் வட்டாரத்தில் நடைபெற்று வரும் துல்லியப் பண்ணைத் திட்டப் பணிகளின் முன்னேற்றம் குறித்து,தோட்டக்கலை துணை இயக்குநர் செய்யது அகம்மது மீரான்ஜி ஆய்வு செய்தார்.

இறவை காய்கறி பயிர்களுக்குச் சொட்டு நீர்ப்பாசன முறையில் திருந்திய பயிர்சாகுபடி முறைகள் குறித்து ஆய்வின் போது விளக்கினார். மேலும், இச் சாகுபடி முறையில் முதல் பயிருக்கு உரம் மற்றும் விதைகளை மானியத்தில் வழங்கவிருப்பதையும் அவர் எடுத்துக் கூறினார்.

மாசிலிப்பட்டியைச் சேர்ந்த ராஜேந்திரன் தோட்டத்தில், சொட்டு நீர்ப்பாசன கருவிகளின் தரத்தையும், அமைக்கப்பட்ட பரப்பளவையும் ஆய்வு செய்தார்.

இந்த வட்டாரத்தில் செயல்படுத்தப்படும் ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டம் மற்றும் உயர் தொழில் நுட்ப மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் பயன்தரும் மரக்கன்றுகள், காய்கறி விதைகளை விவசாயிகள் மானிய விலையில் பெற்று பயனடையுமாறு கேட்டுக் கொண்டார்.

புதூர் தோட்டக்கலை உதவி இயக்குநர் சி. பழனி வேலாயுதம், துணைத் தோட்டக்கலை அலுவலர் அருணாசலம் ஆகியோர் உடனிருந்தனர்.

**ராஜராஜன் 1000 சாகுபடி: ஆட்சியர் வேண்டுகோள்**

First Published : 14 Oct 2010 02:53:14 PM IST

விழுப்புரம், அக். 13: விழுப்புரம் மாவட்டத்தில் ராஜராஜன் 1000 (செம்மை நெல்) சாகுபடி ஆண்டுதோறும் 50 ஆயிரம் ஹெக்டேர் பரப்பில் நடவு செய்யும் தொழில்நுட்பம் வழங்கப்பட்டு வருகிறது. 30 முதல் 40 சதவீதம் கூடுதல் மகசூல் கிடைக்கும் இம்முறையை மாவட்ட விவசாயிகள் மேற்கொள்ள வேண்டும் என்று மாவட்ட ஆட்சியர் ஆர்.பழனிச்சாமி கேட்டுக்கொண்டுள்ளார்.

÷இதுகுறித்து ஆட்சியர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: விழுப்புரம் மாவட்டம் நெல்சாகுபடியில் தமிழகத்திலேயே முதன்மை மாவட்டமாகத் திகழ்ந்து வருகிறது. செம்மை நெல் சாகுபடியில் ஆண்டுக்கு சுமார் 50,000 ஹெக்டர் பரப்பில் பயிரிடப்பட்டு வருகிறது.

÷விவசாயிகள் தங்களுக்குத் தேவையான சாதனங்களை மானிய விலையில் பெற அருகிலுள்ள வேளாண்மை விரிவாக்க மையங்களை அணுகலாம் என்று கூறப்பட்டுள்ளது

**உழவர் மன்றக் கூட்டம்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 15,2010,02:12 IST

ஸ்ரீமுஷ்ணம் : கரும்பு விவசாயிகளுக்கு மானிய தொகை வழங்க வேண்டும் என உழவர் மன்றம் முதல்வருக்கு கோரிக்கை விடுத்துள்ளது. ஸ்ரீமுஷ்ணத்தை அடுத்த ஸ்ரீ நெடுஞ்சேரி உழவர் மன்றம் சார்பில் மன்றக் கூட்டம் ஸ்ரீநெடுஞ்சேரியில் நடந்தது. தலைவர் ராமமூர்த்தி தலைமை தாங்கினார். கரும்பு விவசாயிகளுக்கு தீபாவளி பண்டிகையையொட்டி கரும்புக்கு டன் ஒன்றுக்கு 250 ரூபாய் மானியமாக வழங்க வேண்டும். பாசனத்திற்கான பைப் லைன் அமைக்க கடன் தொகை அனைத்து விவசாயிகளுக்கும் வழங்க வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**பாசிப்பயறு விதைப்பு முறை உதவி இயக்குனர் யோசனை**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 15,2010,03:54 IST

நாமக்கல்: "புதுச்சத்திரம் வட்டாரத்தில் பரவலாக பெய்து வரும் மழையை பயன்படுத்தி, குறுகிய கால பயிரான பாசிப்பயறு விதைப்பு செய்து பயன்பெறலாம்' என, வேளாண் உதவி இயக்குனர் சித்ரா தெரிவித்தார்.

அவர் வெளியிட்ட அறிக்கை: குறுகிய காலப்பயிரான பாசிப்பயறு ஒரு ஏக்கர் விதைப்புக்கு 8 கிலோ பாசிப்பயறு விதை போதும். அதற்கு தழைச்சத்தாக 10 கிலோ யூரியா, மணிச்சத்தாக 20 கிலோ சூப்பர் பாஸ்பேட், சாம்பல் சத்தாக 17 கிலோ பொட்டாஷ் அடியுரமாக கடைசி உழவின்போது இட வேண்டும். மேலும், இண்டு கிலோ பயறுவகை நுண்ணூட்டத்தை விதைப்பதற்கு முன் சீராக தூவ வேண்டும். ஒரு கிலோ விதைக்கு கார்பன்டசிம் அல்லது டிரைக்கோடெர்மா விரிடி நான்கு கிராம் அல்லது சூடோமோனாஸ் ப்ளுரசன்ஸ் 10 கிராம் கலந்து விதைப்பு செய்யலாம். அதன் மூலம் பூஞ்சான நோய்களை கட்டுப்படுத்தலாம். விதைப்பதற்கு 24 மணி நேரத்துக்கு முன் ரைசோபியம் பயறு, பாஸ்போபாக்டீரியா 200 கிராம் வீதம் விதை நேர்த்தி செய்து விதைக்க வேண்டும்.

ஒரு ஏக்கர் நிலத்துக்கு பெண்டி மெத்திலின் 800 மில்லி விதைத்த 3வது நள் 20 கிலோ மணலுடன் கலந்து போதுமான ஈரப்பதம் இருக்கும்போது, சீராக தூவ வேண்டும். மேலும், விதைத்த 25வது

நாள் களை எடுக்க வேண்டும். விதைத்த 25 மற்றும் 40வது நாளில், இரண்டு சதவீத டி.ஏ.பி., கரைசல் கைத்தெளிப்பான் மூலம் காலை அல்லது மாலை வேளைகளில் தெளிப்பதால் மகசூல் அதிகரிக்கும். தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தின் கீழ் மானிய விலையில் கோ 6 பாசிப்பயறு விதைகள் வினியோகம் செய்யப்படுகிறது. விதைகள் தேவைப்படும் விவசாயிகள் புதுச்சத்திரம் வட்டார வேளாண் விரிவாக்க மையத்தை அணுகி பயன்பெறலாம். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**நுண்ணிய நீர் பாசனம் கடைபிடிக்க வேளாண் இயக்குனர் அறிவுரை**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 15,2010,03:36 IST

தர்மபுரி: ""விவசாயிகள் நுண்ணிய நீர் பாசன முறைகளை கடைபிடித்தால் தண்ணீரை சிக்கனப்படுத்துவதோடு உரத்தை தண்ணீரோடு சேர்த்து செலுத்தி அதிக மகசூல் பெறலாம்,'' என, வேளாண்மை துணை இயக்குனர் மேகநாதன் தெரிவித்தார்.தர்மபுரியில் மாவட்ட உழவர் பயிற்சி நிலையத்தின் சார்பில் 250 உழவர் விவாதக்குழுக்கள் செயல்பட்டு வருகிறது. இவற்றில் சிறப்பாக செயல்படும் 50 உழவர் விவாதக்குழு விவசாயிகளுக்கு வேளாண்மை துணை இயக்குனர் அலுவலகத்தில் பயிற்சி முகாம் நடந்தது. வேளாண்மை துணை இயக்குனர் அமுதவள்ளி தலைமை வகித்தார். முகாமில், விவசாயிகள் சாகுபடி பணியில் சந்திக்கும் பிரச்சனைகள் குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது.

துணை இயக்குனர் மேகநாதன் பேசியதாவது:பயிர்சாகுபடிக்கு முக்கிய காரணியாக தண்ணீர் தேவைப்படுகிறது. அதனால், தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்தி வேளாண் அதிகாரிகள் அறிவுறுத்தும் வழிமுறைகளை கடைபிடித்தால் அதிக மகசூல் பெறலாம். நுண்ணிய நீர் பாசன முறைகளான சொட்டு நீர் பாசனம் மற்றும் தெளிப்பு நீர் பாசனதின் மூலம் பயிர்களுக்கு நீர் பாய்ச்சினால் நீரை வீணாக்காமல் பயன்படுத்த முடியும். வாரம் ஒரு முறை தண்ணீருடன் உரத்தினை சேர்ந்து நீர் பாய்ச்சினால் பயிரின் வளர்ச்சியை அதிகப்படுத்தி இரட்டிப்பு மகசூல் பெறலாம்.

தற்போது விவசாய கூலி பணிகளுக்கு ஆட்கள் பற்றாக்குறை உள்ளது. இவற்றில் இருந்து தப்பிக்க விவசாய பயிர்களை வரிசையாகவும், போதிய இடவெளியில் பயிரிட்டு வேளாண் கருவிகளான பயிர் நடவை எந்திரங்களை பயன்படுத்த வேண்டும். அதேபோல் களை எடுப்பதற்கு களை எடுக்கும் கருவி, அறுவடை செய்வதற்கு அறுவடை எந்திரம் ஆகியவற்றை பயன்படுத்த வேண்டும். உழவர் விவாதக்குழுவில் இடம்பெற்றுள்ள விவசாயிகள் புதிய தொழில்நுட்பங்களை கடைபிடிப்பதோடு, தங்கள் பகுதி மற்ற விவசாயிகளுக்கு எடுத்து கூறி விழிப்புணர்வு ஏற்படுத்த

வேண்டும்.இவ்வாறு அவர் பேசினார்.செம்மை நெல் மற்றும் செம்மை கரும்பு சாகுபடி தொழில்நுட்பங்களை குறும்பட செயல்விளக்கத்துடன் விவசாயிகளுக்கு முகாமில் பயிற்சி அளிக்கப்பட்டது. தர்மபுரி மாவட்டத்தில் உள்ள எட்டு யூனியன்களை சேர்ந்த 50 உழவர் விவாதக்குழு விவசாயிகள் பயிற்சி முகாமில் கலந்து கொண்டனர்.

**பொள்ளாச்சியில் கரும்பு விலை உயர்வு**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 15,2010,03:22 IST

பொள்ளாச்சி : பொள்ளாச்சி காந்தி மார்க்கெட்டில் ஆயுத பூஜையையொட்டி கரும்பு விற்பனைக்காக கொண்டு வரப்பட்டுள்ளது. போதிய வரத்து இல்லாததால், விலை உயர்ந்துள்ளது.நவராத்திரி விழாவின் முக்கிய நிகழ்ச்சியான ஆயுத பூஜை நாளை (16ம் தேதி) கொண்டாடப்படவுள்ளது. இதற்காக, பொள்ளாச்சி சந்தைகளுக்கு கரும்பு விற்பனைக்காக கொண்டு வரப்பட்டுள்ளது.மதுரை, நத்தம், சேலம், சங்ககிரி, அருப்புகோட்டை, அறந்தாங்கி, மணப்பாறை, துவரம்குறிச்சி ஆகிய பகுதிகளிலிருந்து வரத்துள்ளது. ஆனால், கடந்தாண்டை விட இந்தாண்டு கரும்பு வரத்து குறைந்துள்ளது.

கடந்தாண்டு, ஆயுத பூஜை பண்டிகையின் போது 40 லோடு (11 டன் கரும்பு வீதம்) வரத்தாக இருந்தது. இந்தாண்டு, ஐந்து லோடு கரும்பு மட்டுமே வரத்தாக உள்ளது. இதனால், விலையும் உயர்ந்துள்ளது. காந்தி மார்க்கெட்டில் நேற்று ஒரு ஜோடி கரும்பு 30 ரூபாய்க்கு விற்பனையானது.கரும்பு வியாபாரிகள் கூறியதாவது:தமிழகத்தில், கடந்தாண்டு வரை கரும்பு அதிகளவில் பயிரிடப்பட்டது. ஆனால், இந்தாண்டு ஆட்கள் பற்றாகுறை காரணமாக சாகுபடி பரப்பு சரிந்துள்ளது. விளைச்சலும் போதிய அளவு இல்லாததால், வரத்து குறைந்துள்ளது. கடந்தாண்டில் கணக்கிடும் போது, 35 லோடு கரும்பு வரத்து குறைந்துள்ளது.வரத்து குறைவால், விலை அதிகரித்துள்ளது. இன்னும் இரண்டு நாட்களுக்கு கரும்புக்கான தேவை அதிகரித்துள்ளதால், விலை ஒரு கரும்புக்கு ஐந்து ரூபாய் வீதம் உயரும் வாய்ப்புள்ளது என்றார்.

**கல்லாபுரத்தில் நெற்பயிரில் மர்ம நோய் தாக்குதல்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 15,2010,02:34 IST

உடுமலை : உடுமலை அருகே கல்லாபுரம் மற்றும் சுற்றுப்பகுதிகளில் பயிரிடப்பட்டுள்ள நெற்பயிரில் கடந்த வாரம் மர்ம நோய் பரவியது. பயிர்களுக்கு 70 நாட்கள் முடிந்து கதிர் பிடிக்கும் தருணத்தில் மர்மநோய் இப்பகுதியில் பரவ துவங்கியது.பயிரின் தண்டு பகுதி முடிந்து கதிர் குலை

துவங்கும் பகுதியில் வெள்ளை நிறத்தில் பூஞ்சாணம் போல் உற்பத்தியானது. சில நாட்களில் கதிர்களில் உள்ள மணிகள் போதிய ஊட்டம் இல்லாமல் காணப்பட்டதுடன், தண்டு முறிந்து தொங்கியது. அறுவடை தருணத்தில் பயிர்களில் பரவிய நோயால் விவசாயிகள் அதிர்ச்சியடைந்தனர்.

மர்ம நோய் தாக்குதல் குறித்து கோவை வேளாண் பல்கலைகழக விஞ்ஞானிகள் குழுவினர் நேற்று கல்லாபுரம் பகுதியில் ஆய்வில் ஈடுபட்டனர். பயிர் நோயியல் துறை இணை பேராசிரியர் ராமநாதன், பூச்சியியல் துறை பேராசிரியர் கெம்புராஜ், இணை பேராசிரியர் முருகன், வேளாண்துறை உதவி இயக்குநர் சைலஸ் ஆகியோர் ஆய்வில் ஈடுபட்டனர். ஆய்வுக்குழுவினர் கூறுகையில், "கல்லாபுரம் பகுதியில் நெற்பயிர்களில் குலைநோய் தாக்குதல் பரவியுள்ளது. 125 ஏக்கரில் 95 ஏக்கரில் நோய் தாக்குதல் அதிகளவு காணப்படுகிறது. பின்போக நடவால் இப்பிரச்னை ஏற்படுகிறது. நடவு பணிகள் குறித்த நேரத்தில் துவங்காதது நோய் தாக்குதலுக்கு முக்கிய காரணமாகும்', என தெரிவித்தனர். நோய் தடுப்பு நடவடிக்கைகள் குறித்து விவசாயிகளுக்கு விளக்கம் அளிக்கப்பட்டது.

**துல்லியப்பண்ணை அமைக்க விவசாயிகளுக்கு அழைப்பு**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 15,2010,02:26 IST

திருப்பூர் : ஆதிதிராவிட விவசாயிகள், துல்லிய பண்ணை அமைக்க, தோட்டக்கலைத்துறை அழைப்பு விடுத்துள்ளது.தோட்டக்கலைத்துறையின் கீழ், மானியத்தில் துல்லியப் பண்ணை அமைக்க 340 ஹெக்டருக்கு 1.06 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. ஒரு குழுவுக்கு 20 விவசாயிகள் என மாவட்டம் முழுவதும் 17 குழுக்கள் தேர்வு செய்யப்படுகின்றன. இதில் நான்கு பேர், ஆதிதிராவிட விவசாயிகளாக இருக்க வேண்டும்; ஆதிதிராவிட விவசாயிகளின் தேர்வு நடக்கிறது. ஒரு விவசாயிக்கு ஒரு ஹெக்டர் அளவில், நீரில் கரையும் உரம் 12 ஆயிரத்து 500 ரூபாய்; சொட்டு நீர் பாசனத்துக்கு 11 ஆயிரத்து 200 ரூபாய் மானியம் அளிக்கப்படுகிறது.

தோட்டக்கலைத்துறை துணை இயக்குனர் இக்னேஷியல் ரோச் கூறுகையில், ""திட்டத்தில் பயன்பெறும் விவசாயிகளுக்கு, சொட்டுநீர் பாசனம் அமைக்க கூட்டுறவு வங்கி மூலம் கடன் வசதி செய்யப்படுகிறது. உடுமலை, மடத்துக்குளம், தாராபுரம், காங்கயம், வெள்ளகோவில் உள்ளிட்ட வட்டங்களில் தேர்வு முடிந்துள்ளது. திருப்பூர், பல்லடம், பொங்கலூர், அவிநாசி, குண்டடம், மூலனூர் பகுதிகளில் தேர்வு நடக்கிறது. தேர்வு நடக்கும் பகுதியில் உள்ள ஆதிதிராவிட விவசாயிகள் விண்ணப்பிக்கலாம்,'' என்றார்.

**உற்பத்தி குறைவு எண்ணெய் விலை விர்ர்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 14,2010,00:27 IST

சிவகங்கை: காய் உற்பத்தி குறைவால், தேங்காய் எண்ணெய் விலை லிட்டருக்கு நான்கு ரூபாய் அதிகரித்துள்ளது. சிவகங்கையில் மளிகை பொருள் விலை (கிலோ): 72 க்கு விற்ற துவரம் பருப்பு- 73; தட்டப்பயறு- 48; கடலை பருப்பு- 40; 83க்கு விற்ற உளுந்தம் பருப்பு- 84; கொண்டக்கடலை - 46; 78 க்கு விற்ற பாசிப்பருப்பு- 80; பாசிப்பயறு- 68; மொச்சைப்பயறு- 48; வெள்ளை மொச்சை- 76; பட்டாணி- 28. வெள்ளை பட்டாணி- 25; மல்லி- 48; புளி- 48, நயம் புளி- 52; 40 க்கு விற்ற பொரி கடலை 42; வத்தல்- 67, அதில் இரண்டாவது ரகம்- 53; 260 க்கு விற்ற மலைப்பூண்டு- 280; 90 க்கு விற்ற தரப்பூண்டு-100; சோம்பு- 140; வெந்தயம் -52; கசகசா -290; சீரகம்- 190; கடுகு- 45; மிளகு -260 ரூபாய். அரிசி விலை (கிலோ): 33 க்கு விற்ற கல்சர் பொன்னி-32; டீலக்ஸ் பொன்னி- 28; ஐ.ஆர்.20.,- 21; 27 க்கு விற்ற செல்லப்பொன்னி- 26. பொன்னி பச்சரிசி- 32; பச்சரிசி- 21; இட்லி அரிசி- 22; கோதுமை- 22; சோளம்- 16; கம்பு- 18; கேப்பை- 16; வரகரிசி- 36 ரூபாய். எண்ணெய் நிலவரம் (லிட்டர்): கடலை எண்ணெய்- 88, பாமாயில்- 47; நல்லெண்ணெய்- 90, 86 க்கு விற்ற தேங்காய் எண்ணெய்- 90 ரூபாய்.

**வேளாண் காப்பீடு திட்டம் விவசாயிகளுக்கு அழைப்பு**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 15,2010,03:20 IST

தூத்துக்குடி : வேளாண் காப்பீடு திட்டத்தில் விவசாயிகள் சேர் ந்து பயன் பெறலாம் என்று கலெக்டர் கேட்டுக் கொண்டுள்ளார்.
இது குறித்து கலெக்டர் மகேஷ்வரன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது ;விவசாயிகள் தங்களது மானாவாரி பயிர்கள் வறட்சி, வெள்ளம், புயல், பூச்சி நோய் போன்ற இய ற்கை சீற்றங்களினால் பாதி க்கப்பட்டு விடுமோ, இதன் மூலம் இழப்பு வந்துவிடுமோ என்று இனிமேல் பயப்பட தேவையில்லை.தமிழக அரசும், மத்திய அரசும் இணைந்து தேசிய வேளாண் காப்பீடு திட்டத்தை தூத்துக்குடி மாவட்டத்தில் நடப்பு ராபி பருவத்தில் செயல்படுத்தி வருகிறது. இந்த திட்டத்தில் பங்கேற்க விவசாயிகளால் செலுத்தப்பட வேண்டிய பிரிமியம் ஏக்கருக்கு மக்காச்சோளத்திற்கு ரூ. 68, சூரியகாந்திக்கு ரூ. 124, உளுந்துக்கு ரூ. 59, பாசிப்பயிறுக்கு ரூ. 82, பருத்திக்கு ரூ. 720, மிளகாயிற்கு ரூ. 630 மட்டும் செலுத்த வேண்டும்.இந்த மானாவாரி பயிர்கள் விØ தத்த அல்லது நடவு செய்த ஒரு மாதத்திற்குள் காப்பீடு செய்யப்பட வேண்டும். காப்பீட்டு

தொகையினை தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கம் மூலம் இதனை செலுத்த வேண்டும். குறிப்பிட்ட பகுதியில் உள்ள அனைத்து விவசாயிகளும் இந்த காப்பீடு திட்டத்தில் பங்கேற்கலாம்.இந்த திட்டத்தில் பங்கேற்பதற்கு தங்களது நில விபரங்களை காட்டும் ஓர் ஆவணத்தை இணைக் க வேண்டும். இதன் மேல் விபரம் அறிந்திட அருகில் உள்ள வேளா ண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை அலுவலரை தொடர்பு கொள்ள வேண்டும். சரியானதொழில் நுட்பத்துடன் போதுமான முதலீட்டினை சாகுபடியில் பயன்படுத்தவும், அதன் மூலம் அதிக விளைச்சல் பெற்றிடலாம். செய்த முதலீட்டினை காக்கும் பொறுப்பினை அதற்கான பிரிமியத்தை செலுத்துவதன் மூலம் தேசிய வேளாண் காப்பீடு திட்டத்திடம் ஒப்படைக்கலாம். இவ்வாறு அந்த அறிக்கையில் கலெக்டர் தெரிவித்துள்ளார்.

**ஆத்மா விவசாயிகளுக்கு திறன் வளர்த்தல் பயிற்சி**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 15,2010,03:40 IST

தூத்துக்குடி : ஓட்டப்பிடாரம் வட்டாரத்தில் ஆத்மா திட்டத்தின் கீழ் விவசாயிகள் ஆர்வலர் குழுக்களுக்கான திறன் வளர்த்தல் பயிற்சி ஓ.சரவணாபுரம் கிராமத்தில் நடந்தது. பயிற்சியில் தூத்துக்குடி வேளாண்மை இணை இயக்குனர் ஜோசப் கருணாநிதி கலந்து கொண்டு ஓ.சரவணாபுரத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள விவசாயிகள் ஆர்வலர் குழு திறன் வளர்த்தல் பயிற்சியில் கலந்து கொண்டுள்ள விவசாயிகள், பயிர்களின் சாகுபடி முறைகளையும், புதிய தொழில் நுட்பங்களையும் கற்றுக் கொண்டு செயல்படுத்தி அதிக மகசூலைப் பெற வேண்டும். விவசாய ஆர்வலர் குழு தொடங்கப்பட்ட ஆறுமாதம் கழித்து ஆத்மா திட்டத்தின் கீழ் சுழல் நிதியாக ரூ.10 ஆயிரம் வழங்கப்பட உள்ளது என்றார். பயிற்சியில் தூத்துக்குடி வேளாண்மை துணை இயக்குனர் சீனிவாசன் கலந்து கொண்டு பயறு வகை சாகுபடி முறைகளையும், பயறு வகை பயிர்களுக்கான இலை வழியாக 2 சத டி.ஏ.பி தெளிக்கும் முறைகளையும், உயிர் உரங்கள், நுண்உரங்கள் இடுவதன் அவசியத்தையும் எடுத்துக் கூறினார்.

தூத்துக்குடி வேளாண்மை துணை இயக்குனர் (மத்தியத்திட்டம்) ரஞ்சித்சிங் தனராஜ் உளுந்து, பாசிப்பயறு பயிரிடும் விவசாயிகள் ஊடே அவரை பயிரையும், வரப்பில் ஆமணக்கு பயிரையும் சாகுபடி செய்திட வேண்டும். இதனால் பூச்சி தாக்குதலை சுலபமாக கண்காணிக்கலாம். மேலும் கூடுதல் வருவாயும் கிடைக்கும் என்றார். பயிற்சியில் ஓட்டப்பிடாரம் வே ளாண்மை உதவி இயக்குனர் மோகன்ராஜ், கோவில்பட்டி மண்பரிசோதனை நிலைய வேளாண் மை அலுவலர்கள் செல்வம், சாந்திராணி, தூத்துக்குடி வேளாண்மை அலுவலர் (மத்தியதிட்டம்) மார்டின்ராணி, ஓட்டப்பிடாரம் வேளாண்மை துணை அலுவலர் தங்கதுரை, ஓட்டப்பிடாரம் வேளாண்மை உதவி அலுவலர்கள் பிரான்சிஸ், நயினார், ஜெகதீஸ்பாண்டியன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஏற்றுமதியாகும் வாழை

பதிவு செய்த நாள் : அக்டோபர் 15,2010,00:00 IST



மதுரை: போதுமான அடிப்படை நீராதாரங்கள் இல்லாத காரணத்தினால், தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்த வேண்டிய கட்டாயம் தமிழகத்திற்கு உள்ளது. இன்றைய நிலையில் விவசாயத்திற்கு அதிகமான அளவில் நீரை பயன்படுத்துவதால், இத்துறையில் தண்ணீர் சிக்கனத்தை கடைபிடிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. மதுரை தோட்டக்கலைத் துறையில், தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்தும் துல்லிய பண்ணை திட்டம் அமைக்க 65 சதவீதம் மானியம் அளிக்கப் படுகிறது. இதைப் பயன்படுத்தி, உசிலம்பட்டி யூனியன் தொட்டப்ப நாயக்கனூர் அருகே பூச்சிப்பட்டி கிராமத்தில், உசேன் அகமது என்பவர் திசு வாழையை பயிர் செய்துள்ளார்.சாதாரணமாக, ஒரு ஏக்கருக்கு தேவைப்படும் தண்ணீரில், இத்திட்டத்தின் மூலம் மூன்று ஏக்கருக்கு பாசன வசதி கிடைக்கிறது. தண்ணீரிலேயே உரமும் கலந்து விடுவதால், உரமும், தண்ணீரும் வீணாகாமல் வாழைக் கன்றுகளுக்கு கிடைத்து, அவை செழுமையாக வளர்கின்றன."ஜி9 என்ற ரக திசு வாழைக் கன்று ஒன்று 12 ரூபாய் என, பெங்களூரில் இருந்து வாங்கி வந்து நட்டேன். ஒருஏக்கரில் 1,200 கன்றுகள் நடலாம். ஆறு மாதங்களில் குலை தள்ளும். ஒன்பதாவது மாதத்தில் அறுவடை செய்யலாம். வாழைத்தார் 45 கிலோ இருக்கிறது. ஒரு கிலோ 9 ரூபாய்க்கு விற்கப்படுகிறது.

ஈரான், ஈராக், அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு வாழைப்பழம் அனுப்புகிறோம்' என்கிறார் உசேன் அகமது.

**சூடுபிடிக்கிறது "பொரி" உற்பத்தி**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 15,2010,00:00 IST



சேலம்: இம்மாவட்டத்தில் சேலம் நகர், ஓமலூர், ஆத்தூர், வாழப்பாடி, இடைப்பாடி ஆகிய இடங்களில் பொரி அதிகமாக உற்பத்தி செய்யப்படுகிறது. இதற்காக கர்நாடகா, ஆந்திரா ஆகிய மாநிலங்களில் இருந்து இன்டால், சிக்ஸ்போர் என பிரத்யேக நெல் வரவழைக்கப்படுகிறது. இந்த நெல்லை பதப்படுத்தி அரிசியாக மாற்றுகின்றனர். பின், மிதமான வெப்பநிலையில் அரிசியை காய வைத்து, தேவையான அளவு உப்புக் கரைசல் சேர்த்து பொரி தயாரிக்கின்றனர். ஒரு பக்கா அரிசியில் ஆறு பக்கா பொரி தயார் செய்யலாம்.இங்கு தயாரிக்கப்படும் பொரிக்கு தமிழகம் முழுவதும் கிராக்கி அதிகம். ஆயுத பூஜைக்காக இந்த ஆண்டும் வியாபாரிகள் பலர் பொரி வாங்க அதிகளவு ஆர்டர்கள் கொடுத்துள்ளனர். இதனால், பொரி உற்பத்தி சூடுபிடித்துள்ளது.

**"புறா' வளர்ப்பில் வருமானம்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 15,2010,00:00 IST



விழுப்புரம்: விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் ஒன்றியம் செக்கடிக்குப்பம் கிராமத்தைச் சேர்ந்தவர் காத்தவராயன். இவர், விவசாய நிலத்தின் அருகில் ஒரு கான்கிரீட் பீம் அமைத்து, அதன் மேல்பகுதியில் கூண்டு அமைத்து, கடந்த நான்கு ஆண்டுகளாக புறாக்களை வளர்த்து வருகிறார்.கை, கால்களை முடக்கும் "கக்குவான்' நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு புறா ரத்தம் மருந்தாக பயன்படுகிறது. செயலிழந்த உடல் பகுதியில் புறாவின் ரத்தத்தை தேய்ப்பதாலும், உள்ளுக்கு குடிப்பதாலும் உடலில் வெப்பம் ஏற்பட்டு, நரம்புகள் மீண்டும் செயல்படுவதற்கு உ<தவுகிறது என்பது, கிராம மக்களிடம் தற்போதுள்ள நாட்டு மருத்துவ முறை. நோயினால் பாதிக்கப்பட்ட பலர், மருத்துவத்திற்காக இங்கு வருகின்றனர். ஒரு புறா 100 ரூபாய்க்கு விற்கப்படுகிறது.

தினத்தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

## அக்டோபர்–செப்டம்பர் மாத காலத்தில் இந்தியாவில் காபி உற்பத்தி 3.08 லட்சம் டன்னாக உயரும்



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

புதுடெல்லி

சென்ற 2009–10–ஆம் ஆண்டு பருவத்தில் (அக்டோபர் – செப்டம்பர்) காபி உற்பத்தி 2.89 லட்சம் டன்னாக இருந்தது. இது, நடப்பு 2010–11–ஆம் ஆண்டு பருவத்தில் 6.5 சதவீதம் அதிகரித்து 3.08 லட்சம் டன்னாக உயரும் என காபி வாரியம் முன்னறிவிப்பு செய்துள்ளது. இந்தியா, மொத்த காபி உற்பத்தியில் 70 சதவீதத்தை ஏற்றுமதி செய்கிறது. எனவே, நடப்பு நிதி ஆண்டில், நாட்டின் காபி ஏற்றுமதி பன்மடங்கு அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மூன்றாவது இடம்

ஆசியாவில் காபி உற்பத்தியில் நம் நாடு மூன்றாவது இடத்தில் உள்ளது. உலக அளவில் ஆறாவது இடத்தில் உள்ளது. உலகின் மொத்த காபி உற்பத்தியில் இந்தியாவின் பங்களிப்பு சுமார் 4 சதவீதமாக உள்ளது. உள்நாட்டில் தென் மாநிலங்களில்தான் அதிகளவில் காபி உற்பத்தி மேற்கொள்ளப்படுகிறது. நம் நாட்டில் லட்சக்கணக்கான காபி தோட்டங்கள் உள்ளன. மொத்தம் 9 லட்சம் ஏக்கர் பரப்பளவில் காபி உற்பத்தி மேற்கொள்ளப்படுகிறது.

*இந்தியாவில் காபி உற்பத்தியில் கர்நாடக மாநிலம் முதலிடத்தில் உள்ளது. நாட்டின் மொத்த காபி உற்பத்தியில் இம்மாநிலத்தின் பங்களிப்பு சுமார் 70 சதவீதமாகும். இங்கு குடகு, சிக்மகளூர் மற்றும் ஹசன் ஆகிய பகுதிகள் அதிகளவில் காபி உற்பத்தி செய்து வருகின்றன. இந்திய காபி உற்பத்தி துறை சுமார் 6 லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு அளித்துள்ளது. சர்வதேச அளவில் காபி உற்பத்தி மற்றும் ஏற்றுமதியில் இந்தியாவின் பங்களிப்பு 3.5 சதவீத அளவிற்கே உள்ளது.*

*நடப்பு நிதி ஆண்டில் ஏப்ரல் முதல் செப்டம்பர் வரையிலான ஆறு மாத காலத்தில் நம்நாட்டின் காபி ஏற்றுமதி 1.56 லட்சம் டன்னாக அதிகரித்துள்ளது. இது, சென்ற நிதி ஆண்டின் இதே காலத்தில் மேற்கொள்ளப்பட்ட ஏற்றுமதியை விட 75 சதவீதம் அதிகமாகும். சென்ற நிதி ஆண்டின் முதல் ஆறு மாத காலத்தில் நாட்டின் காபி ஏற்றுமதி 89,140 டன் என்ற அளவில் இருந்தது.*

*நடப்பு முழு நிதி ஆண்டில் 2.10 லட்சம் டன் காபி ஏற்றுமதி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. சென்ற முழு நிதி ஆண்டில் நம்நாட்டிலிருந்து 2.04 லட்சம் டன் காபி ஏற்றுமதி மேற்கொள்ளப்பட்டு இருந்தது. முதல் ஆறு மாத காலத்தில் காபி ஏற்றுமதி சிறப்பான அளவில் அதிகரித்துள்ளதையடுத்து நடப்பு நிதி ஆண்டிற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள ஏற்றுமதி இலக்கை சுலபமாக எட்ட முடியும் என காபி வாரியம் மேலும் தெரிவித்துள்ளது.*

*சர்வதேச காபி அமைப்பு*

*சர்வதேச காபி அமைப்பின் மதிப்பீட்டின்படி, சென்ற மாதத்துடன் நிறைவடைந்த பருவத்தில் இந்தியாவின் காபி ஏற்றுமதி 60 சதவீதம் உயர்ந்து 2.71 லட்சம் டன்னாக அதிகரித்துள்ளது. இது, முந்தைய பருவத்தில் 1.78 லட்சம் டன்னாக இருந்தது. சென்ற பருவத்தில், ஆகஸ்டு வரையிலான 11 மாதங்களில், உலகின் காபி ஏற்றுமதி 4.4 சதவீதம் குறைந்து 8.63 கோடி மூட்டைகளாக சரிவடைந்துள்ளது. ஒரு மூட்டை என்பது 60 கிலோ காபியை கொண்டதாகும்.*

## தேயிலை செடிகளின் கவாத்துக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும்

## குன்னூர் உபாசி, தேயிலை வாரியம் விவசாயிகளுக்கு அறிவுரை

*குன்னூர், அக்.15–*

தேயிலை செடிகளின் கவாத்துக்கு முக்கியத் துவம் அளிக்க வேண்டும் என்று தேயிலை வாரியம், உபாசி அறிவுரை வழங்கி உள்ளது.

தேயிலை தோட்டங்கள்

குன்னூர் தேயிலை வாரிய மும், உபாசி வேளாண்மை அறிவியல் மையமும் இணைந்து வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறப்பட் டுள்ளதாவது:–

நீலகிரி மாவட்டத்தில் உள்ள சிறு விவசாயிகளிடம் சுமார் ஒரு லட்சம் ஏக்கர் பரப்பில் தேயிலை தோட் டங்கள் உள்ளன. இந்த தேயிலை தோட்டங்களில் ஆண்டுக்கு 25 சதவீதம் கவாத்து செய்ய வேண்டும். கவாத்து செய்யும் போது இலை பறிக்கும் ஆட்களின் பற்றாக்குறை ஏற்படாமல் உதவியாக இருக்கும்.

கொழுந்துகள்

ஒவ்வொரு ஆண்டும் தோட் டத்தில் ¼ பாகம் கவாத்து செய்ய வேண்டும் என்பது உபாசி வேளாண்மை அறி வியல் மையத்தில் அறிவுரை யாகும். கவாத்து செய்யப் படாத தோட்டங்களில் இருந்து பறிக்கும் பச்சை தேயிலை கொழுந்து தரமான தேயிலை தூளை தயாரிக்க உகந்ததாக இருக்காது. எனவே கவாத்து செய்யும் போது விவசாயிகளின் பல இன்னல் களுக்கு தீர்வு காண முடியும்.

கடந்த மே, ஜூன், ஜூலை மாதங்களில் அதிக தேயிலை மகசூல் இருந்தது. இந்த சமயத்தில் தேயிலை தோட்டங் களில் இருந்து பறிக்கப்பட்ட கொழுந்துகள் பெரும்பாலும் தரமற்றவை யாக இருந்தன.

அதிக தேயிலை வரத்து காரணமாகவும், தரமில்லாத கொழுந்தாக இருந்ததாலும் தேயிலை தொழிற்சாலைகள் கொழுந்தை வாங்க முடிய வில்லை. சிறு விவசாயிகள் இந்த சமயத்தில் தேயிலை பரப்பில் ¼ பாகத்தை கவாத்து செய்து இருந்தால் இந்த நெருக்கடியான நிலையை சமாளித்து இருக்கலாம்.

கவாத்து

தற்போது பல தேயிலை விவசாயிகள் கவாத்து செய்து, தோட்டங்களை பராமரித்து நுண்ணூட்ட சத்துக்களை தெளித்து தரமான தேயிலை கொழுந்துகளை பறிக்கிறார் கள். இதனால் தரமான பச்சை தேயிலைக்கு ரூ.18 வரை விலை பெற்று வருகிறார்கள். அதே சமயத்தில் அனைத்து கிராமங்களிலும் தேயிலை சிறு விவசாயிகள் சங்கம் அமைத்து தோட்டங்களை பராமரித்து தரமான தேயிலை கொழுந்து களை வழங்கும் போது, நல்ல விலையை பெற வேண்டும். கவாத்துக்கு முக்கி யத்துவம் வழங்கி செயல்முறை படுத்தும் போது கண்டிப்பாக சிறு தேயிலை விவசாயிகளின் வாழ்க்கை தரம் உயரும்.

தேயிலை தரம் உயரும்

ஒவ்வொரு விவசாயியும் தங்களது தோட்டங்களில் நடவு செய்துள்ள தேயிலை செடிகளை 5 ஆண்டுகளில் முதல் கவாத்து செய்ய வேண் டும். இந்த கவாத்து செய்யும் போது தரை மட்டத்தில் இருந்து 18 அங்குலம் வரை உயரம் வைத்து செடிகளை வெட்ட வேண்டும். பின்னர் 2–வது, 3–வது கவாத்து செய் யும் போது ஒவ்வொரு 2 அங் குலம் உயரம் வைத்து 20 அங் குலம், 22 அங்குலம், 24 அங் குலம் என்று தரை மட்டத்தில் இருந்து உயரத்தை உயர்த்தி கவாத்து செய்ய வேண்டும்.
அவ்வாறு கவாத்து செய்யும் போது இலையின் தரமும், தேயிலை உற்பத்தியும் தோட்டத்தில் உள்ள தேயிலை செடிகளின் ஆரோக்கியமும் நன்றாக இருக்கும்.
இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.

## விவசாயிகளுக்கு இலவச மோட்டார் பம்ப் வழங்கும் திட்டம்: இணைய தளத்தில் டெண்டர் வெளியீடு நிபந்தனைகளை தளர்த்துமாறு சிறு உற்பத்தியாளர்கள் எதிர்பார்ப்பு

கோவை,அக்.15–
விவசாயிகளுக்கு இலவச மோட்டார் பம்ப்செட் வழங்கும் திட்டத்தில் பம்ப்செட் கொள்முதல் செய்வதற்கான டெண்டர் இணைய தளத்தில் வெளியிடப்பட்டு உள்ளது. அதில் உள்ள நிபந்தனைகளை தளர்த்துமாறு சிறு, குறு பம்ப் உற்பத்தியாளர்கள் வலியுறுத்தி உள்ளனர்.
இலவச மோட்டார் பம்ப்
தமிழக அரசு விவசாயிகளுக்கு இலவச மோட்டார் பம்ப்செட் வழங்கும் திட்டத்தை விரைவில் அமுல்படுத்துகிறது. இதற்காக மாவட்டந்தோறும் விவசாயிகள் கணக்கெடுப்பு பணி நடந்து வருகிறது. மேலும் மோட்டார் பம்ப்செட் கொள்முதல் செய்யும் வகையில் அரசு இணைய தளத்தில் டெண்டர் வெளியிடப்பட்டு உள்ளது.
அதில் இலவச மோட்டார் பம்ப் வழங்கும் திட்டத்துக்காக பம்ப் கொள்முதல் செய்ய இருக்கும் நிறுவனங்களை தேர்வு செய்வதற்காக சில நிபந்தனைகள் விதிக்கப்பட்டு உள்ளன. அந்த நிபந்தனைகள் சிறு, குறு பம்ப் உற்பத்தியாளர்களுக்கு பயன் அளிக்காது என்றும், அதனால் நிபந்தனைகளை தளர்த்த வேண்டும் என்றும் கோவையில் உள்ள சிறு, குறு பம்ப் உற்பத்தியாளர்கள் வலியுறுத்தி உள்ளனர். இதுதொடர்பாக கோயமுத்தூர் பம்ப் உற்பத்தியாளர்கள் மற்றும் உதிரிபாகங்கள் உற்பத்தியாளர் சங்க

(கோப்மா) தலைவர் மணிராஜ் கூறியதாவது:–

தளர்த்த வேண்டும்

இலவச மோட்டார் பம்ப் வழங்கும் திட்டத்தில், பம்ப் கொள்முதலுக்காக அரசு சில நிபந்தனைகளை விதித்து உள்ளது. பம்ப் விற்பனைக்கு தயாராக இருக்கும் நிறுவனங்கள் ஆண்டுக்கு ரூ.30 கோடி வர்த்தகம் செய்யவேண்டும், கம்பெனியின் சொத்து மதிப்பீடு ரூ.15 கோடி இருக்கவேண்டும், முன்வைப்பு தொகை ரூ.10 லட்சம் செலுத்த தயாராக இருக்கவேண்டும் என்று கூறப்பட்டு உள்ளது.

சிறு, குறு தொழில் நிறுவனத்தினரை மேம்படுத்த அரசு பல்வேறு நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. அதேபோல் இந்த பம்ப் வழங்கும் திட்டத்திலும் சிறு, மற்றும் குறு பம்ப் உற்பத்தியாளர்கள் பயன்பெறும் வகையில் அவர்களுக்கும் வாய்ப்பு கிடைக்கும் வகையில் நிபந்தனைகளை தளர்த்த வேண்டும். ஆண்டு வர்த்தக மதிப்பு, வைப்புத்தொகை, சொத்துமதிப்பீடு ஆகியவற்றை குறைத்தால் மட்டுமே சிறு, மற்றும் குறு உற்பத்தியாளர்கள் டெண்டரில் பங்கேற்க முடியும். இல்லாவிட்டால் மிகப்பெரிய நிறுவனங்களுக்கு மட்டுமே அந்த வாய்ப்பு கிடைக்கும்.

அரசுக்கு வலியுறுத்தல்

கோவை நகரம் மோட்டார் பம்ப்செட் உற்பத்தியில் மிகவும் பிரசித்தி பெற்ற நகரம். இங்கு குடிசைத்தொழில்போல் பம்ப் உற்பத்தி, உதிரிபாகங்கள் உற்பத்தி நடந்து வருகிறது. நகரில் 500 சிறு, குறு பம்ப் உற்பத்தியாளர்களும், அவர்களை சார்ந்து 25 ஆயிரம் தொழிலாளர்களும், உதிரிபாகங்கள் உற்பத்தி, வேலையாட்கள் என்று 75 ஆயிரத்துக்கு மேற்பட்டோரும் தொழிலில் ஈடுபட்டு வருகிறார்கள்.

கோவையில் உற்பத்தி செய்யப்படும் பம்புகள் மகாராஷ்டிரா, கர்நாடகா, ஆந்திரா, கொல்கத்தா மற்றும் வடமாநிலத்தின் பெரும்பாலான பகுதிகளுக்கு விற்பனைக்கு கொண்டு செல்லப்படுகிறது. கர்நாடகா மாநிலத்துக்கு வெளியூர்களில் இருந்து செல்லும் பம்ப்களில் 75 சதவீதம் கோவையில் இருந்து அனுப்பப்படுவதாகும். பம்ப் தொழிலை மேம்படுத்தும் வகையில் இலவச கொள்முதல் திட்டத்தில் சிறு, குறு உற்பத்தியாளர்கள் பயனடைய டெண்டர் நிபந்தனையை தளர்த்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சிறு, குறு உற்பத்தியாளர்கள் வேண்டுகோள் வைத்து உள்ளனர்.

இவ்வாறு அவர் கூறினார்.